# கவிமணியும் ஆன்மீகமும்

**முனைவர் மு. சாந்தினி**
*உதவிப் பேராசிரியர்*
*முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கல்லூரி,*
*அகஸ்தீஸ்வரம்*

## முன்னுரை

பண்பாடு, நாகரீகம் என்று சொல்லும் பொழுது உயர்ந்த, தாழ்ந்த என்ற சொற்களும் கூடவே நினைவிற்கு வரும். உயர்ந்த பண்பாடு என்பது ஒருநாட்டின் பொருளாதார வளத்தாலோ, அறிவியல் முன்னேற்றத்தின் காரணமாகவோ கூறப்படுவது இல்லை. அங்கு வாழும் மக்களின் பகுத்தறிவு, ஒற்றுமை உணர்வு, சகிப்புத்தன்மை, ஒருவரையொருவர் நேசிக்கும் அன்பு, கருணை, பிறருக்கு உதவுதல் போன்ற நற்குணங்களினால் வாழும் நல்வாழ்க்கை முறையினால் தான் உயர்ந்த பண்பாடு எனப்போற்றப்படுவதுண்டு. ‘‘ஆன்மீக உணர்வு நிறைந்த வாழ்க்கையில் தான் முழுமையான திருப்தி காணமுடியும், அப்போதே சமுதாயம் சீரடையும்’’ என்ற ஏ. பி. ஜே. அப்துல்கலாமின் வார்த்தைகளுக்கு ஏற்றாற்போல் கவிமணிதேசிகவிநாயகம்பிள்ளை தன்னுடையக் கவிதைகளில் கூறியுள்ள ஆன்மீகக் கருத்துக்களைக் காண்போம்.

## சமயம்

மதம், ஆன்மீகம், சமயம் இவை மூன்றும் ஒரே பொருள் கொண்டவை. ‘‘மதம் என்ற சொல்லுக்கும், அறிவைக் குறிக்கும் மதி என்ற சொல்லுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மதியை வளர்ப்பதற்கும், வலிமைப்படுத்துவதற்கும் உரியது தான் மதம். எல்லா மதங்களுமே முக்கியமாகத் தம்மைத் தாமே உயர்த்திக் கொள்ளும் வழியைத்தான் காட்டுகின்றன.

சமயம் என்பது ஒருவகைச் சமைவைக் குறித்தலால் சமயம் எனப்பட்டது. சமைத்தல் உண்பதற்குப் பதமாதல். அரிசி சோறாகச் சமைவது உண்பதற்கு ஏற்றதாகும். பெண் மங்கையாகச் சமைவது திருமணத்திற்குப் பதமாதல். ஆன்மா இறை அடிமையாகச் சமைவது வீடுபேற்றிற்கு அல்லது இறைவன் திருவடிகளை அடைவதற்குப் பதமாதல். மேலும் சமையம் என்பது வேளையை (நேரம்) குறிக்கும் போதும் தக்க காலநிலை எனப் பொருள்படும். நல்ல சமையம் தக்க சமையம், ஏற்ற சமையம், எல்லாம் ஒரு பொருள் தருபவை. எல்லா சமைவுகளிலும் இறைவன் அடிமையாகச் சமைவது சிறந்தது. ஆதலால் பொருள் மயக்கம் ஏற்படாதவாறு, சோறு சமைவது சமையல் என்றும், பெண் சமைவது சமைதல் என்றும், நேரம் சமைவது சமையம் என்றும், ஆன்மா சமைவது சமயம் என்றும் சொல்லப்படுகிறது.

பரம்பொருளைப் பரமாத்மா என்றும், உயிர்களை ஜீவாத்மா என்றும் அழைக்கின்றோம். ஜீவாத்மா பரமாத்மாவை அறிந்து அதனுடன் கலக்க வேண்டும். அதுவே ஜீவாத்மாவின் இலட்சியம். ஜீவாத்மா தன்னைத்தானே அறிந்து கொண்டால் தான் பரமாத்மாவை அறியமுடியும். ஜீவாத்மா தன்னை அறிவது என்பது ஆன்மாவை அறியும் அறிவே ஆன்மீகம். அது ஆன்மாவை மேம்படுத்துவதாகும் என்று ஸ்ரீமத் பகவத் கீதையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தெய்வங்கள்

எல்லா ஆற்றலும் உடையதாய், எல்லா உலகங்களையும் படைத்து, காத்து, அழித்து வரும் ஒரு பரம்பொருள்தான் தெய்வம். எல்லாவற்றையும், கடந்திருப்பதனாலேயே இறைவனுக்குக் கடவுள் எனப் பெயரிட்டனர். இந்து மக்கள் ஒவ்வொரு பயனுக்கும் வெவ்வேறுத் தெய்வங்களை வழிபட்டனர். கவிமணி அவர்கள் சரஸ்வதி, இலட்சுமி, குமரிப்பகவதி, விநாயகர், செந்தில்குமரன், பிரம்மன், திருமால், சிவபெருமான், தாணுமாலையன், எமன், இயேசுபிரான், புத்தர் போன்ற தெய்வங்களைப் பற்றி பாடல்கள் இயற்றியுள்ளார்.

**உள்ளமே கோவில்**

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனைத் தெய்வச் சன்னதியில் சென்று வழிபடும் போது மனம் ஒருமைப்படும். சிலர் கோவிலுக்குச் சென்றாலும் ஏதாவது பழங்கதைகள், தங்களுடைய சுகதுக்கங்களைப் பற்றி பேசிக்கொண்டு இருப்பர். ஆனால் நாம் எவ்விடத்தில் இருந்தாலும் இறை உணர்வோடு இருக்க முடியும் என்று தாயுமானவர் கூறியுள்ளார்.

**"நெஞ்சமே கோவில் நினைவே சுகந்தம் அன்பே**
**மஞ்சனநீர் பூசை கொள்ள வாராய் பராபரமே"**

இதேபோல் கவிமணி அவர்களும் மனதை அலைபாயவிட்டு பண்ணிடும் பூசையாலே பயன் இல்லை. உள்ளத்தில் தான் இறைவன் உள்ளான். உள்ளத்தில் இறைவனைக் கண்டால் கோயில் உள்ளேயும் காண்பாய் என்று சிறந்த ஒரு வழிபாட்டு முறையைக் கூறியுள்ளார்.

**"உள்ளத்தில் உள்ளான் அடி – அது நீ**
**உணர வேண்டும் அடி**
**உள்ளத்தில் காண்பாய் எனில் - கோயில்**
**உள்ளேயும் காண்பாய் அடி"** **(மலரும் மாலையும். பாடல்.. 44)**

**ஆன்மா அழிவில்லாதது**

"ஆத்மா ஒருபோதும், இறப்பதுமில்லை. அது இல்லாதிருந்து பிறகு பிறந்ததன்று. இது பிறவாதது, இறவாதது, தேயாதது, வளராதது, காயம் கொல்லப்படுமிடத்தும் ஆத்துமா கொல்லப்படுவதில்லை" என்று பகவான்கிருஷ்ணர் கூறியுள்ளார். கவிமணியும் கிடைத்தற்கரிய இம்மனித பிறவியில் என்றும் அழிவில்லாத ஆன்மாவை மேம்படுத்தி அறநெறியில் நிற்போம் என வலியுறுத்தியுள்ளார்.

**ஆதலால் எந்நாளும் அழியாத பொருளாம்**
**ஆன்மாவை மேம்படுத்தி அறநெறியில் நின்று**
**தீதெலாம் அறவொதுக்கித் திருவருளும் பெற்றுச்**
**சிவஞானச் செல்வரெனத் தினம் வாழுவோமே"** **(மலரும் மாலையும் பாடல். 624)**

**எல்லா உயிர்களும் இறைவனின் வடிவம்**

தாயுமான சுவாமிகள் "பரம்பொருள் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது" என்று பாடியுள்ளார். உலகிலுள்ள ஒவ்வொன்றும் தெய்வத்தன்மை உடையது என்று கூறுவது பாரதப்பண்பாடு. கவிமணியும் எனது சுகதுக்கங்கள் என்ற கவிதையில் பிறைச் சந்திரனில் சிவபெருமானையும், சூரியஉதயத்தில் பார்வதிதேவியையும், தாமரைமலர்களில் திருமாலையும், யானைக்கூட்டங்களில் பிள்ளையாரையும், மயில் கூட்டங்களில் முருகனையும் என காணும் பொருள்கள் ஒவ்வொன்றிலும் இறைவனைக் காணுவதாகப் பாடியுள்ளார்(மலரும் மாலையும். பாடல்.476-480).

**பழிப்பது போல் இறைவனைப் போற்றுதல்**

எல்லா உயிர்களிலும் நிறைந்திருக்கும் பரம்பொருளான இறைவனைப் பக்தியோடு வணங்கும் போது சிலர் உரிமையோடு ஒருமையில் அழைப்பதுண்டு. பாரதியார் கண்ணனைத் தன்னுடைய தோழன், தாய், தந்தை, சேவகன், குரு, காதலன், காதலியாகப் பாவித்துக் கவிதைகள் இயற்றியுள்ளார். இதில் கண்ணனைப் பழிப்பது போல் புகழ்த்திப் பாடியுள்ளார். கவிமணியும் நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் நூலில் விநாயகர் வணக்கம் என்னும் பாடலில் விநாயகரைப் பழிப்பது போல் உயர்த்திப் பாடியுள்ளார்.

**நேர்த்திக்கடன்**

பக்தர்கள் தாங்கள் விரும்பிய பொருள் கிடைப்பதற்கு அல்லது செயல் நடைபெறுவதற்குப் பலவிதமான தான தர்மங்கள் செய்து, விரதங்கள் இருப்பர். தெய்வ அருளால் தாங்கள் நினைக்கும் காரியம் இனிதே நடைபெற்றால் மொட்டைபோடுவது, கோவிலுக்கு ஏதாவது விலையுயர்ந்த பொருள் வாங்கி வைப்பது, அன்னதானம் வைப்பது, தேங்காய் உடைப்பது, அலகு குத்துவது என பலவிதமாக

வேண்டிக்கொள்வர். இதனை நேர்த்திக்கடன் என்பர். விரும்பியது நடைபெற்றவுடன் அதனைச் செய்வர். சுஜாதை தனக்குக் குழந்தை பிறந்தால் தேவர்களும் விரும்பும்படி பலவிதமான உணவுகளைப் பக்குவமாகச் சமைத்து, பொன்னால் செய்தப் பாத்திரங்களில் அழகாக எடுத்து வந்து, தெய்வம் வாழ்கின்ற மரத்தடியில் வைத்து வணங்குவேன் என்று வேண்டி இருந்தாள்.

**"உம்பரும் விரும்பும் உண்பதற் குரிய**
**பண்டம் பலவும் பக்குவம் செய்து**
**பொற்றால ங்கள் பொலிவுற எடுத்து**
**வனத்தின் தெய்வம் வாழ்மரத் தடியில்**
**வைத்து நின்று வணங்குவேன் என்றொரு**
**நேர்த்திக் கடனும் நேர்ந்திருந்தனள்" (ஆசியஜோதி,பக்கம்.113)**

**பாவமன்னிப்புக் கேட்டல்**

தவறு செய்வது மனித இயல்பு. தாங்கள் முன்னர் செய்தத் தவறானச் செயல்கள் நம்மைத் துன்புறுத்தாமல் இருக்க கடவுளிடம் மன்னிப்புக் கேட்பது பக்தர்களின் இயல்பு. ஏனெனில் அனைத்து மதங்களும் மனிதனை நல்வழிப்படுத்த பாவம் செய்தால் தண்டனை நிச்சயம் எனக் கூறியுள்ளது. இந்துக்கள் காசி, கன்னியாகுமரி, இராமேஸ்வரம் போன்ற புனித தீர்த்தங்களில் நீராடினால், தங்கள் அறிந்தும், அறியாமலும் செய்த பாவங்கள் நீங்கும் என்றும் நம்புகின்றனர். அறியாமல் செய்தத் தவற்றை உணர்ந்துவிட்டாலே பாதிபாவம் குறையும். அதிலும் கடவுளிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டால் பாவம் நம்மை அண்டாது. கடவுள் நம்மைமன்னிப்பார். கவிமணி தான் செய்தத் தவறானச் செயல்களை மன்னித்தருளுமாறு அழகம்மை தேவியிடம் வேண்டியுள்ளார். கவிமணி அழகம்மையிடம்,

**"பொன்னையே பெண்ணையே மண்ணையே எண்ணி**
**பொழுதெல்லாம் போக்கி விட்டேன்,**
**புண்ணியச் செயலெதும் பண்ணியான் அறிகிலேன்**
**பொல்லாங்கு புரியும் நெறியேன்" (மலரும் மாலையும். பாடல். 30)**

என்னை மன்னித்து அருள் புரியம்மா என்று வேண்டியுள்ளார்.

**சரணடைதல்**

சரணாகதி என்பது எளிதானதல்ல. முழு சரணாகதி மூலம்தான் இறைவனின் கருணைக் கிடைக்கும். ஒரு சமயம் நம்பிக்கை, சோதனை வரும் சமயம் அவநம்பிக்கை என பலரும் இருக்கின்றனர். உறுதியாக இருக்கும் நிலை பண்பட்ட மனங்களுக்குத்தான் வரும். இதையே கிருஷ்ணர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

என்மீது யாருக்குப் பூரணநம்பிக்கை இருக்கிறதோ அவனுக்குத்தான் உதவி செய்வேன். வெறும் வாய்ச்சொற்களுக்கு மயங்கமாட்டேன். இதுதான் ரகசியம் எனக் கூறியுள்ளார் அதனால்தான் துச்சாதனன் துகில் உரியும் பொழுது பாஞ்சாலி கைகளால் புடவையைப் பற்றியபடியே, கண்ணா! கண்ணா! என அழைத்தபொழுது கிருஷ்ணர் உதவிக்கு வரவில்லை. ஆனால் கண்ணனே முழு சரணாகதி என்று முழுநம்பிக்கையுடன் கைகளைக் குவித்து வணங்கிய போது சேலையைக் கொடுத்துக் காப்பாற்றினார்.

இதேபோல் கவிமணி வயதானக் காலத்தில் தொழுநோயால் அவதிப்பட்டார். தன்னுடையத் தொழுநோய் தீர முருகப் பெருமானிடம்,

**பண்டிதரும் கைவிட்டார்; பத்தியமும் தீர்ந்தது; யான்**
**உண்டமருந் தால் குணமோ ஒன்றில்லை; - அண்டர்**
**அமரா வதிகாத்த அண்ணலே! செந்தில்**
**குமரா; எனையாண்டு கொள் (மலரும் மாலையும். பாடல். 21)**

என சரண் அடைந்து பாடிய பாடல் செந்தில் குமரன் என்னும் கவிதையில் இடம் பெற்றுள்ளது.

**வழிபாட்டுப் பொருள்கள்**

பக்தர்கள் இறைவனைப் பூஜித்து வழிபடும்போது தேங்காய், பழம், பூ, வெற்றிலை, பாக்கு வைத்து வழிபடுவர். தேங்காய் உடைப்பது தீவினைகள் அழியும் என்றும், வாழைப்பழத்தில் விதையில்லாததால் பிறவியைத் தவிர்த்து ஆட்கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கைகளின் அடிப்படையில் தான். இறைவன் தமக்குக் கொடுத்தப் பொருட்களை வைத்து வழிபடுவது ஒருவித நன்றிக் கடனாகக் கருதுகின்றனர். ஆடு, கோழிகளைக் கூட பலி கொடுப்பர். ஆனால் கவிமணி பொருட்களைப் படையல் செய்து வழிபாடு செய்வதைவிடத் தீய எண்ணங்களை இறைவனுக்குப் பலியிடுவதேச் சிறந்தது என்று ஞானதீபம் என்னும் கவிதையில் கூறியுள்ளார் **(மலரும் மாலையும். பாடல். 448-561).**

**முடிவுரை**

இன்பமும் துன்பமும் கலந்துள்ள வாழ்வில் எதிர்கால வாழ்க்கைக்கான நம்பிக்கையைக் கொடுப்பது இறைவழிபாடு ஒன்றே. மதங்களின் பெயரால் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் இச்சூழலில், இறைவன் ஆலயங்களில் இல்லை உள்ளத்திலே உள்ளான். ‘‘உள்ளத் தூய்மை ஒன்றே சிறப்பான வழிபாடு’’ என்று வலியுறுத்திய கவிமணியின் ஆன்மீகக் கருத்துக்கள் எல்லா சமயத்தினருக்கும், எக்காலத்திற்கும் பொருத்தமானவை ஆகும்.